# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

<u>ஆணை நாள் 12.09.2019</u>

**<u>முன்னிலை</u>**

## முனைவர் ரா.பிரதாப்குமார்
### மாநிலத் தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். SA 2317/B/18</u>**

திரு,G.குருசாமி — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மேட்டூர்,
சேலம் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

## <u>ஆணை</u>

இவ்வாணையத்தால் இன்று (12.09.2019) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு,G.குருசாமி அவர்கள் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர், திரு கே.கருணாகரன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மேட்டூர் வட்டாட்சியர் அலுவலகம், சேலம் மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 09.11.2017 தேதியிட்ட மனுவில், சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பாலமலை கிராமம், பழைய க.ச.5 பு.ஏ.4.94 செண்ட் பழைய க.ச.7 பு.ஏ.4.05 செண்ட் போன்றவைகளை மறு நில அளவையில் அளக்கப்பட்டுள்ளதன் முழு கோப்புகளின் நகல் வழங்குமாறு தகவல் கோரி சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு மனு செய்துள்ளார்.

3. தமக்கு தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர், தான் கோரியுள்ள தகவல்களை தனக்கு பெற்றுத் தருமாறு தெரிவித்து, தேதி குறிப்பிடப்படாமல் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை சேலம் மாவட்டம், மேட்டூர்

வட்டாட்சியர் அலுவலக மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். மேல்முறையீட்டு மனுவிற்குப் பின்னும் தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர் 28.03.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (12.09.2019) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு 07.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல் நேரிடையாக வழங்க எடுத்து வந்திருப்பதாக தெரிவித்து, அதன் நகலை சார்வு செய்தார். இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்களை பெற்றுக் கொண்டு தனக்கு திருப்தி என்று ஆணையத்தில் தெரிவித்தார்.

5. ஆவணங்கள் அடிப்படையில் தகவல் வழங்கப்பட்டுள்ளதால், வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2317/B/18</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மேட்டூர்,
சேலம் மாவட்டம்.

திரு,G.குருசாமி, த/பெ.குருவபண்டாரம்,
வடக்கு தெரு, பொரவிபாளையம்,
பாலக்குட்டப்பட்டி புதூர் (அஞ்சல்),
அந்தியூர் வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

Copy to: File / Stock File
SC/PA/16.09.2019